**செய்தி வெளியீடு எண் : 246** **நாள் : 31.01.2025**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனை நடத்தும் குழந்தைகளுக்கான சிறப்பு புற்றுநோய் பதிவகம் (Childhood Cancer Registry) தொடக்கம் 658 சிறப்பு மருத்துவர்கள் நியமிக்கப்பட உள்ளனர் 2553 மருத்துவர்கள் நியமிக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெறுகிறது, பிப்ரவரி 2025 இறுதிக்குள் நிரப்பப்படும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தகவல்**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று (31.01.2025) சென்னை, அடையாறு புற்றுநோய் மருத்துவமனை நடத்தும் குழந்தைகளுக்கான சிறப்பு புற்றுநோய் பதிவகம் (Childhood Cancer Registry) தொடங்கி வைத்தார்கள். பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

***<u>குழந்தைகளுக்கான சிறப்பு புற்றுநோய் பதிவகம் (Childhood Cancer Registry)</u>***

சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனை என்பது இந்தியாவின் முதல் பெண் மருத்துவராக டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களால் தொடங்கப்பட்ட ஒரு வரலாற்று சிறப்புமிக்க மருத்துவமனை ஆகும். டாக்டர் கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் சாந்தா அவர்களால் மிகச் சிறப்பாக நிர்வாகம் செய்யப்பட்டு தமிழ்நாட்டில் சிறப்பு மிக்க புற்றுநோய் சிகிச்சைக்கு அடையாளமாக திகழும் மருத்துவமனையாக உள்ளது. இன்றைக்கு அம்மருத்துவமனை தமிழ்நாடு அரசோடு இணைந்து பல்வேறு அமைப்புகள் ஒருங்கிணைந்து சென்னை அடையார் புற்றுநோய் மருத்துவமனையும், இந்திய குழந்தைகள் இரத்தவியல் மற்றும் புற்றுநோயியல் குழுவும், இந்திய குழந்தைகள் புற்றுநோயியல் மையமும் ஒருங்கிணைந்து குழந்தைகள் புற்றுநோய் பதிவேடு மற்றும் தரவுகளை கணக்கிடும் பணியினை தொடங்கியது. அந்தவகையில் சென்னையைப் பொறுத்தவரை சென்னை மக்கள் தொகையின் அடிப்படையிலான குழந்தை பருவ புற்றுநோய் பதிவேட்டினை அவர்கள் தயாரித்து இன்று வெளியிடப்பட்டுள்ளது. அதோடுமட்டுமல்லாமல் தமிழ்நாடு மக்கள் தொகை அடிப்படையில் குழந்தை பருவ புற்றுநோய் பதிவேடு ஒன்றும் பரிசோதனைகள் செய்வதற்குரிய பணிகளும் இன்று தொடங்கப்பட்டது. ஆக இதன்மூலம் தமிழ்நாட்டில் எவ்வளவு குழந்தைகள் புற்றுநோய் நோயினால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை கண்டறிந்து அவர்களுக்கு தொடக்க நிலையிலேயே சிகிச்சைகள் வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும். இந்தியாவிலேயே குழந்தை பருவ புற்றுநோய் கண்டறியும் பணி என்பது தமிழ்நாட்டில் மட்டுமே பிரத்யேகமாக நடைபெற்று வருகிறது என்பது மகிழ்ச்சியான ஒன்று.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, புற்றுநோய்க்கான பிரத்யேக அமைப்புகள், பிரத்யேக கருவிகள் எல்லாம் தருவிக்கப்பட்டு இன்று பெரிய அளவில் பயன்பாட்டில் இருந்துக் கொண்டிருக்கிறது. Cancer Robotic Equipment என்று சொல்லக்கூடிய கருவி தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, இன்றைக்கு 125க்கும் மேற்பட்ட புற்றுநோய் பாதிப்புகளுக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சைகள் மூலம் நலமுற்றிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் ஆராய்ச்சி மையம் உருவாக்கம் செய்யும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மிக விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். மேலும் பல்வேறு பணிகள் புற்றுநோய் பாதிப்புகளுக்கு உள்ளானவர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. புற்றுநோய் பாதிப்புகளை முழுமையாக கண்டறியும் பணி அரசின் சார்பில் ஏற்கெனவே தொடங்கப்பட்டு 4

மாவட்டங்களில் நடைபெற்றுள்ளது. ஈரோடு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கன்னியாகுமரி ஆகிய 4 மாவட்டங்களில் இந்தப் பணி ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து வருவாய் மாவட்டங்களிலும் ஆண்கள், பெண்கள் என்று அனைவருக்குமே புற்றுநோய் பாதிப்புகளை கண்டறிவதற்கு ரூ.27 கோடி செலவிலான பணிகளும் மிக விரைவில் தொடங்கப்படவிருக்கிறது. மிக விரைவில் அடையாறு புற்றுநோய் மருத்துவமனை என்பது குழந்தை பருவ புற்றுநோய் பாதிப்புகளை கண்டறியும் பணி என்பது சென்னை முழுவதும் மட்டுமன்றி தமிழ்நாடு முழுவதும் தொடங்கும் பணியினை நானும், துறையின் செயலாளர் அவர்களும் அடையார் புற்றுநோய் மருத்துவமனை வல்லுநர்களுடன் சேர்ந்து தொடங்கி வைத்திருக்கிறோம்.

***<u>சிறப்பு மருத்துவர் காலிப்பணியிடங்களை நிரப்புவது தொடர்பான கேள்விக்கு</u>***

சிறப்பு மருத்துவர் காலிப்பணியிடங்களைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் 658 காலிப்பணியிடங்கள் இருக்கின்றது. ஏற்கெனவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநரகங்களில் எங்கெயெல்லாம் காலிப்பணியிடங்கள் இருக்கின்றது என்பதை கண்டறிந்து 658 காலிப்பணியிடங்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. மகப்பேறு மருத்துவர் (O&G) காலிப்பணியிடங்கள் 207, இருதய அறுவை சிகிச்சை மருத்துவர்கள் (Cardio Surgery) காலிப்பணியிடம் 16, நரம்பியல் அறுவை சிகிச்சை (Neuro Surgery) மருத்துவர்கள் 16, தடய அறிவியல் (Forensic Medicine) மருத்துவர்கள் 50, முதியோர் நல மருத்துவர்கள் (Geriatric Medicine) 13, மயக்கவியல் மருத்துவர்கள் (Anasthetists) 71, பொது மருத்துவர்கள் (General Medicine) 121, பொது அறுவை சிகிச்சை மருத்துவர்கள் (General Surgery) 121, கதிரியக்கவியல் மருத்துவர்கள் (Radiologist) 42, எலும்பியல் மருத்துவர்கள் (Orthopedician) 1 என மொத்தம் 658 காலிப்பணியிடங்கள் இருக்கின்றது. இந்த மருத்துவர்கள் காலிப்பணியிடங்கள் நிரப்புவதற்கு துறையின் சார்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இன்று Walk in interview என்கின்ற வகையில் மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் (MRB) மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் இரண்டு நாட்களில் இதற்கான அரசாணைகள் வெளியிடப்பட்டு 658 காலிப்பணியிடங்களை நிரப்பும் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும். Walk in interview என்பது கடந்த காலங்களில் 2014, 2020 ஆகிய இரு ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே முதுநிலை மருத்துவப் பணியிடங்களை நிரப்புவதற்கு Walk in interview மூலம் 658 மருத்துவர் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

***<u>கடந்த ஆண்டு தேர்வு செய்யப்பட்ட 1021 மருத்துவர்களுக்கும் கலந்தாய்வு</u>***

இளங்கலை மருத்துவர்களைப் பொறுத்தவரை 2553 பணியிடங்கள் நிரப்புவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, 05.01.2025 அன்று தேர்வுகள் நடைபெற்றது. 2553 பணியிடங்களுக்கு 24,000 மருத்துவர்கள் தேர்வு எழுதியிருக்கிறார்கள். தற்போது விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் முடிவுற்று, முடிவு வெளியிடும் நிலை என்பது பிப்ரவரி முதல் வாரத்தில் வெளியிடப்படும். மதிப்பெண்கள் வெளியிடப்பட்டவுடன் பிப்ரவரி 12,13,14 ஆகிய 3 நாட்களில் மருத்துவர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு பணிகள் நடைபெறவிருக்கிறது. சான்றிதழ் சரிபார்ப்பு முடிக்கப்பட்டு பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் பட்டியலை சம்மந்தப்பட்ட துறைகளுக்கு தரப்படும். தமிழ்நாட்டில் மட்டும்தான் புதிய பணியிடங்களை நிரப்பும்போது கலந்தாய்வு நடத்தப்பட்டு அவரவர் விரும்பும் இடங்களுக்கே பணி ஆணைகள் தரப்படும். ஏற்கெனவே நிரப்பப்பட்ட மருத்துவர், மருந்தாளுநர், செவிலியர் ஆகிய காலிப்பணியிடங்களை நிரப்பும்போது கலந்தாய்வு நடத்தி அவரவர் விரும்பும் இடங்களிலேயே பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி புதிதாக தேர்வு செய்யப்படும் 2553 மருத்துவர்களுக்கும் கலந்தாய்வு நடத்தப்பட்டு அவரவர் விரும்பும் இடங்களுக்கே பணி ஆணைகள் தரப்படும். எனவே பிப்ரவரி இந்த மாதம் இறுதிக்குள் மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்களினால் 2553 மருத்துவர்களுக்கும் பணிநியமன ஆணைகள் வழங்கப்படும். கடந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 1021 மருத்துவர் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டது. அவர்களுக்கு பணிஆணைகள் தரப்படும்போது ஒரு அறிவுறுத்தல்கள் தரப்பட்டது. யாரும் பணியிடமாறுதல் தொடர்பாக கோரிக்கை வைக்கக்கூடாது, காரணம் எங்கெயெல்லாம் அதிக காலிப்பணியிடங்கள் இருந்ததோ 20 மாவட்டங்களை தேர்ந்தெடுத்து, அதிக காலிப்பணியிடங்கள் உள்ள இடத்திற்கு மட்டுமே கலந்தாய்வு நடத்தப்பட்டு 1021 மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டது. அந்த மருத்துவர்கள் தொடர்ந்து இத்துறையின் கட்டுப்பாட்டை ஏற்று, 1021 மருத்துவர்களும் 20 மாவட்டங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தற்போது அவர்களுக்கும் பிப்ரவரி முதல் வாரத்தில் கலந்தாய்வு நடத்தப்படவிருக்கிறது. 2553 மருத்துவர் பணியிடங்களும் நிரப்பப்படுவதால் 100% காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும் நிலை என்பது பிப்ரவரி இறுதிக்குள் முடிவடையும் தருவாயில் கடந்த ஆண்டு தேர்வு செய்யப்பட்ட 1021 மருத்துவர்களுக்கு கலந்தாய்வு நடத்தப்பட்டு அவரவர் விரும்பும் இடங்களுக்கே பணியிடமாறுதல் ஆணை வழங்கப்படவிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ஏற்கெனவே உள்ள மருத்துவர்களுக்கும் கலந்தாய்வு முறை நடத்தப்பட உள்ளோம்.

***<u>சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவனையில் நோயாளிக்கு ஏற்பட்ட ஒவ்வாமை குறித்த கேள்விக்கு</u>***

சம்மந்தப்பட்ட மருத்துவக்கல்லூரி முதல்வர் அவர்களிடம் விசாரிக்கப்பட்டது. இம்மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 9 பேரில் ஒருவர் ஏற்கெனவே பல்வேறு உடல் பாதிப்புகளினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நேற்று இரவு 01 மணிக்கு அவரது உடலை உறவினர்கள் பெற்றுச் சென்றுள்ளார்கள். மீதம் உள்ள 8 பேர் நல்ல நிலையில் இருக்கிறார்கள். தவறுதலாக ஊசி போட்டு இறந்திருக்கிறார்கள் என்பது தவறு. Contaminated Saline என்று சொல்கிறார்கள், அதுவும் கூட இன்னும் மருத்துவர்களினால் இன்னும் உறுதி செய்யப்படவில்லை. சேலம் மருத்துவக்கல்லூரி முதல்வர் அவர்கள் உடனடியாக 3 மருத்துவர்கள் கொண்ட குழு அமைத்து இது தொடர்பாக விசாரிக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். இன்று மாலைக்குள் அவர்களது விசாரணை முடிவுகள் தெரிந்துவிடும். நாளை காலை இந்நிகழ்வு எதனால் ஏற்பட்டுள்ளது என்கின்ற விவரத்தினை பத்திரிக்கையாளர்களுக்கு செய்திக் குறிப்பாக தர உள்ளோம் என்று மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, இ.ஆ.ப., அடையாறு புற்றுநோய் மருத்துவமனை செயல் தலைவர் மரு.ஹேமந்த்ராஜ், இணை இயக்குநர் மரு.சாமிநாதன் ராஜாராமன், குழந்தைகள் புற்றுநோய் மருத்துவர்கள் மரு.வெங்கட்ரமணன், மரு.ரமண்தீப் அரோரா, மரு.நிகில்பக்தா, மரு.ஈவா ஸ்டெல்லாரேவா மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu